# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

# SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதற்கு முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

## இணக்க அதிகாரி

இது வங்கியில் உள்ள முக்கிய முகாமைத்துவ பதவி நிலை (தலைமை முகாமையாளர் தரம்) என்பதோடு வங்கியின் இணக்க அபாயத்தை அடையாளம் காணல் மற்றும் வங்கியின் இணக்க முயற்சிகளை கண்காணித்தல் மற்றும் முடிவுகளை அறிக்கையிடல், CBSL சுற்றுநிருபங்கள், வழிகாட்டல்கள் மற்றும் உள்ளக நிலைகள் மூலம் வெளி ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் உள்ளக கொள்கைகளுடன் வங்கியின் இணக்கத்தை உறுதி செய்தல், ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுச் சபைக்கு (BIRMC) நேரத்திற்கு அறிக்கையிடல்.

**தகைமைகள்**

வங்கியியல், வியாபாரம், வர்த்தகம், பொருளாதாரம், கணக்கியல், பௌதீக விஞ்ஞானம், சட்டம் அல்லது சட்டத்தரணி ஆகிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணி பட்டம் அல்லது முதுமாணி பட்டம்

**அத்துடன்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (ICASL)/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA UK)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA UK) அல்லது AIB (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) நிறுவனத்தில் இருந்து பகுதி தகைமைகள்.

வங்கி ஒழுங்குமுறை இணக்கத்தில் உள்ள எந்த ஒரு மேலதிக தகைமைகளும் விரும்பத்தக்கது.

**வேலை அனுபவம்**

வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் ஒட்டுமொத்தமாக 9 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் குறைந்தது 04 ஆண்டுகள் முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இணக்க செயற்பாட்டில் அனுபவம் மற்றும் முழுமையான அறிவு, ஒழுங்குமுறை இணக்கம், பணச் சலவை தடுப்பு நடைமுறைகள், கூட்டிணைந்த ஆளுகை மற்றும் நெறிமுறைகளில் போதுமான அறிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**ஊதியம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 164,730 - 3,280 x 20 - 230,330. தோராயமாக மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 287,500.00.

வயது - 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

## கிளை முகாமையாளர்

**முக்கிய பொறுப்புகள்**

தயாரிப்பு விற்பனை, இலாபம் மற்றும் வாடிக்கையாளர் கையகப்படுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் கிளையை வழிநடத்துதல், உள்ளக கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் கிளை நடவடிக்கைகளின் சீரான செயறபாட்டை உறுதிசெய்து, வங்கியின் வணிக இலக்குகளை நோக்கிச் செயற்பட ஊழியர்களை ஊக்குவித்தல்.

**தகைமைகள்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலை அல்லது உரிம பரீட்சை அல்லது ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவன (CIMA UK) கட்டம் I மற்றும் II பரீட்சை அல்லது IBSL இன் இணை அங்கத்துவத்துடன் ப.மா.ஆ. அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வங்கியியல், வியாபாரம், நிர்வாகம், வர்த்தகம் அல்லது பொருளியல், கணக்கியல் அல்லது அதற்கு இணையான பட்டம்.

**அனுபவம்**

வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவகம் ஒன்றில் கிளை கடன் மதிப்பீடு, கடன் வழங்கல், இடர் செயற்பாடுகள் மற்றும் கடன் மீட்பு செயற்பாடுகள் ஆகிய துறையில் நிறைவேற்றுனரான 06 ஆண்டுகள் ஒட்டுமொத்த அனுபவம், அதில் உதவி முகாமையாளர் ஒருவராக தகைமைக்கு பின்னரான குறைந்தது நான்கு ஆண்டுகள் (04) அனுபவம் இருத்தல் வேண்டும். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல் மற்றும் ஆளிடை திறன்களை பெற்றிருத்தல் வேண்டும்.

**ஊதியம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 135,125 – 2,650 x 20 - 188,125. தோராயமாக மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 248,500.00.

**வயது** - 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது).

## பதவிநிலை உத்தியோகத்தர் – ஏற்பாட்டியல்

வங்கியின் ஏற்பாட்டியல் மற்றும் நிர்வாக பிரிவுக்கு நாளாந்த நிர்வாக உதவிகளை வழங்குவது இந்த பதவியின் ஒட்டுமொத்த நோக்கமாகும். விற்பனையாளர்களுக்கு கொள்வனவு கோரல்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் மற்றும் கொள்வனவு கோரல் நடைமுறை தொடர்பாடல்/ கோரிக்கைகளை கையாளுதலுக்கு பொறுப்பாவார். வெளியிடப்பட்ட பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய ஆவணங்களை தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல். இந்தப் பதவி நிலை சரக்கு முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கும்.

**தகைமைகள்**

ப.மா.ஆ. அங்கீகரித்த பல்கலைக்கழகம்/ நிறுவகம் ஒன்றில் இருந்து வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், ஏற்பாட்டியல், வர்த்தக நிர்வாகம் ஆகிய துறையில் இளமாணி பட்டம் அல்லது எந்த ஒரு இணையான தகைமை.

அரச பெறுகையில் உள்ள டிப்ளோமா பிரத்தியேக அனுகூலமாக அமையும்.

**அனுபவம்**

புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் வழங்கல் சங்கிலி செயற்பாடுகள்/ ஏற்பாட்டியலில் 03 ஆண்டுகள் நிறைவேற்றுநர் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். நிதி நிறுவனம் ஒன்றில் ஏற்பாட்டியலில் உள்ள அனுபவம் உறுதியான அனுகூலமாக அமையும். அபேட்சகர் சிறந்த வாய் மூல மற்றும் எழுத்து மூல தொடர்பாடலை மேற்கொள்பவராகவும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் பெற்றவராகவும் சுதந்திரமாக பணியாற்றுவதற்கு ஆளிடை திறன்களை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு ஊழியர்களுக்கு வழிகாட்டல் மற்றும் நிர்வகிப்பதுடன் பல் திட்டங்களை கையாளுதல்.

அரச பெறுகை நடைமுறைகள் தொடர்பான அறிவு பிரத்தியேக அனுகூலமாக அமையும்.

**ஊதியம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 90,645 - 1,220 x 20 - 115,045. தோராயமாக மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 189,800.00.

வயது - 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

## வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்

**முக்கிய பொறுப்புகள்**

நிறுவனத்தின் அனைத்து வன்பொருள் சாதனங்களுக்கான தற்போதைய பராமரிப்பு மற்றும் உதவிச் சேவைகளை வழங்குவதில் பொறுப்பு வகித்தல். நிறுவனம் மற்றும் அதன் நிலையில் (உதாரணம்: நடவடிக்கை, குறை, EOS, EOL முதலியன) பயன்படுத்தப்படும் அனைத்து வன்பொருள் மற்றும் மென்பொருட்களின் இருப்பை இற்றைப்படுத்திய வகையில் பேணுதல். மென்பொருட்களை நிறுவுதல்/ கட்டமைத்தல். IT குழு, விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் பயனர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு மற்ற பங்குதாரர்களுடன் கூட்டிணைந்து பணியாற்றுதல் வேண்டும்.

**தகைமைகள்**

3 சித்திகளுடன் க.பொ.த. உயர் தரத்தில் (பொது அறிவு ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து IT இல் டிப்ளோமா.

**அல்லது**

தொடர்புடைய துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் N.V.Q தரம் 4 இனை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

வன்பொருள் பராமரிப்பு தொடர்பான தொழில்துறை சான்றிதழை பெற்றிருப்பது கூடுதல் நன்மையாகும்.

**அனுபவம்**

தனிப்பட்ட கணினிகள், சர்வர்கள், மடிக் கணினிகள், அச்சுப்பொறிகள், தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு உதவும் வலைப்பின்னல் உபகரணங்களின் பராமரிப்பு, குறைபாடு திருத்தலில் ஒட்டுமொத்தமாக இரண்டு (02) ஆண்டுகள் அனுபவம், Windows, UNIX, Oracle மற்றும் பல்வேறு வன்பொருள் சாதனங்கள் ஆகிய பல் தொழில்நுட்ப தளங்களில் அனுபவம்.

**ஊதியம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 49,135 - 220 x 20 - 53,535. தோராயமாக மாதாந்த மொத்த சம்பளம் 134,900.

**வயது** - 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

## பராமரிப்பு உதவியாளர்

**பொறுப்புகள்**

**பதிவு மற்றும் கோப்பு ஆவணங்கள், விலைப்பட்டியல்கள் மற்றும் அறிவுறுத்தல் கையேடுகளை பராமரித்தல்**

- பராமரிப்பு கருவிகள், பொருட்கள் மற்றும் பாகங்களின் இருப்பை பேணுதல்.
- அவசர பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்கு ஒப்புதலைப் பெற முகாமைத்துவத்திற்கு அறிவித்தல்.
- கட்டமைப்பு பராமரிப்பு மற்றும் தளங்களை சுத்தமாக வைத்திருத்தல்
- உபகரணங்களின் செயலிழப்புகளை கண்டறிதல் மற்றும் பழுதுபார்த்தல்.
- பராமரிப்பு கருவிகள், பொருட்கள் அல்லது மாற்று பாகங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்புதலை பெறுதல்.
- பராமரிப்பு குழுவை கண்காணித்தல்.
- அனைத்து நேரங்களிலும் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை பின்பற்றுதல்.

**தகைமைகள்**

3 சித்திகளுடன் க.பொ.த. உயர் தரத்தில் (பொது அறிவு ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட சான்றிதழ் கற்கை

**அல்லது**

தொடர்புடைய துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் N.V.Q தரம் 4 இனை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**அனுபவம்**

புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் இதனையொத்த திறனில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம்.

**ஊதியம்**

சம்பள அளவு - வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) சேர்த்து மாதத்திற்கு ரூபா 49,135 - 220 x 20 - 53,535. தோராயமாக மாதாந்த மொத்த சம்பளம் 134,900.

**வயது** - 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை — வங்கியின் ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் நடைமுறைகளின்படி நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி - 2025.04.20**

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும்.

**விண்ணப்பங்கள் careers@smib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.**